# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.413/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | குணசேகரன் | த-பெ | மாரி |
| ஊர்: | : | நாகப்பட்டினம் | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் துணை கண்காணிப்பாளர், DCRB நாகப்பட்டினம் | மாவட்டம் | நாகப்பட்டினம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026

**எதிரி ஆஜர். சாட்சி நாகப்பட்டினம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலி காட்சி அறையில் இருந்து காணொலி வாயிலாக சாட்சியம் அளிக்கிறார்.**

---------------------------------------------------------------------------------------------

**குறுக்கு விசாரணை**

வழக்கில் புகாரை எழுதியது யார் என்றால் புகார்தாரர் எழுத்து மூலமாக புகார் அளித்தார். சாட்சிகளை எங்கு எப்போது விசாரணை செய்தேன் என்றால் 15.08.2015 அன்று சம்பவ இடத்தில் வைத்து 13.30-17.00 மணிவரை விசாரணை செய்தேன். வழக்கில் அருவருக்கத்தக்கதாகவோ அசிங்கமாகவோ பேசியதற்காக பொதுமக்கள் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் ஆயுதங்களான விலக்கமாறு குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விலக்கமாறை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். விலக்கமாறை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் தான் புகார்தாரர் சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்று தீர்மானிக்க முடியும் என்றால் சரிதான். மருத்துவரை விசாரணை செய்யும் போது 9.30 மணிக்கு கட்டையால் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வரைபடத்தில் வாதி லாவன்யா வீடு கிழக்கு பக்க வாசலும், சம்பவம் நடந்தது வடக்கு பக்கமும் என்றால் சரிதான். வரைபடத்தில் இருசக்கர வாகனம் நின்றதாக சொல்லப்பட்டுள்ளது ஆனால் அது எங்கு நின்றது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சிறுவன் சைக்கிள் ஓட்டும்போது இருசக்கர வாகனத்தில் மோதி விட்டதாகவும், அதன்று புகார்தாரர் தடமாறி விழுந்துவிடுவாய் என்றும் உன் அப்பன் வீட்டு ரோடா என்று புகாரில்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் தலை முடியை பிடித்து இழுத்து காலால் தாக்கியதாக வாசகம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரி வீடு புகார்தாரர் வீடு வேறு வேறு தெரு என்றால் சரிதான். எதிரி வீட்டின் முன்பு தான் சம்பவம் நடந்ததாகவும், சிறுவன் சைக்கிள் ஓட்டியதாகவும் அதனால் தான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. வரைபடத்தில் சம்பவ இடம் எதிரி வீட்டின் முன்பு என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் எதிரி வீட்டின் வலது புறம். எதிரி வீடு, அ.சா.1 வீடு, அ.சா.2 வீடு ஆகியவை வடக்கு பக்க வாசல் என்று சொன்னால் தவறு என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் எண், வாகனத்தின் உரிமையாளர், அடையாளம் ஆகியவை புகாரிலோ, விசாரணையிலோ செல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் சாட்சி லெட்சுமி சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட விளக்கமாறு சீப்பு விளக்கமாறு என்று சொல்லியுள்ளது சரியா தவறா என்றால் சரிதான். சீப்பு விளக்கமாறுக்கு விளக்கம் தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி லெட்சுமி சம்பவயிடத்தில் தன்னை தவிற வேறு யாரும் இல்லை என்று சொல்லியுருந்தால் சரியா தவறா என்றால் சரியல்ல. எதிரிக்கும், புகார்தாரருக்கும் முன் விரோதம் இருந்தது என்பதை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். முன பகையின் காரணமாக கொடுத்த புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியமானது இந்நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு நயினார் முகமது செரஸ்தாரர் முதன்மை மாவட்ட நீதிமன்றம் நாகப்பட்டினம், என்பவர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.07 11:36:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.